1972 ஆகஸ்ட் 24]

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : இருபது நாட்களுக்கு முன்பாக அரசுத் துறை விவசாயச் செயலாளர் அவர்களும், பிராஜக்ட் ஆபீசர்களும் இது சம்பந்தமாகப் பேசினார்கள். பேசி அந்தந்த இடங்களில் இருக்கும் நிலைமைக்கேற்ப 600 அடி என்ற விதியைத் தளர்த்திக் கொள்ளலாம் என்ற முடிவை எடுத்துள்ளார்கள் என்று அறிகிறேன். அதை அமைச்சர் அவர்கள் அமல்படுத்த முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இந்த வினாவுக்கு ஏற்கெனவே விடை சொல்லியிருக்கிறேன்.

திரு. ஏ. எம். இராஜா : அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது ஒரு கிணற்றுக்கும் மற்றொரு கிணற்றுக்கும் இடையில் இருக்கும் தூரம் இவ்வளவு இருக்க வேண்டுமென்பதை நீக்கிவிட்டு ஒரு வட்டத்திற்கு இவ்வளவு புதிய கிணறுகள் என்று நிர்ணயித்திருப்பதாகத் தெரிகிறது. புதிய கிணறுகள் இவ்வளவு இருக்க வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா அல்லது ஒரு வட்டத்திற்கு இவ்வளவு கிணறுகள்தான் இருக்க வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : புதிய கிணறுகள் எத்தனை, பழைய கிணறுகள் எத்தனை, விசையேற்றம் வைத்திருக்கக்கூடிய கிணறுகள் எத்தனை என்பதைப் பற்றியெல்லாம் நிலவள இயக்குநர் அவர்கள் சான்றிதழ் கேட்டிருக்கிறார்கள்.

பல்லடம் பகுதிக்குக் குழாய்க் கிணறுகள்

* 316 வினா— திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வறட்சிப் பகுதியான பல்லடம் பகுதிக்குக் குழாய்க் கிணறுகள் அரசாங்கமே அமைத்துக் கொடுக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் என்றால், எத்தனை குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட இருக்கின்றன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) இல்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

திரு. கே. என். குமாரசாமி: வறட்சிப் பகுதியில் குழாய்க் கிணறுகள் அமைத்து சர்க்காரே முழுச் செலவையும் செய்து எப்படி தஞ்சை போன்ற மாவட்டங்களில் அணைகளின் மூலம் தண்ணீர் கொடுக்கும்போது அதற்கு 30 ரூபாய், 35 ரூபாய் என்று வசூலித்துக் கொள்ளுகிறார்களோ அப்படி குழாய்க் கிணறுகள் அமைத்துக் கொடுத்து 30, 35 ரூபாய் வசூலித்துக் கொள்ளும் வகையில் அரசு குழாய்க் கிணறுகளை அமைத்துக் கொடுக்க முன் வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: 'இல்லை' என்று பதில் சொல்லும்போது கூட்டுறவுத் துறையில் இப்படிப்பட்ட திட்டம் இல்லையென்று சொன்னேன். உள்ளாட்சித் துறையில் **சமுதாயக்** கிணறுகள் என்ற திட்டத்தில் பல்லடம் தாலுகாவும் அடங்கு மென்று கருதுகிறேன்.

கூட்டுறவுப் பண்ணைகள்.

* 317 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்குப் விடை யளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் தற்போது கூட்டுறவுப் பண்ணை சாகுபடித் திட்டம் எங்கெங்கு நடைபெறுகிறது?

(இ) எத்தனை ஏக்கர் நிலத்தில் நடைபெறுகிறது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) & (இ) தஞ்சை மாவட்டத்தில் 50 இடங்களில் குத்தகைதார் கூட்டுறவுப் பண்ணைச் சங்கங்கள் நடைபெறுகின்றன.

விவரங்கள் அடங்கிய விவர அறிக்கை* ஒன்று சட்டப் பேரவை முன்பு வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா: தஞ்சை மாவட்டத்தில் கூட்டுறவு சாகுபடித் திட்டங்களின் கீழ் நடைபெறும் கூட்டுறவுத் திட்டங்கள் எந்த அளவுக்குச் சாகுபடி முறையில் முன்னேற்றம் அடைந் திருக்கிறது? சாகுபடியாளர்கள் எந்த அளவுக்கு முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள் என்பதை அரசு அறிவிக்குமா?

---

* 395–398-ஆம் பக்கங்களில் மூன்றும் இணைப்பாக அச்சிடப் பட்டுள்ளது.